**Date**: 19.03.2021

**DVA** 505 / 2019

ம.சா. 1 வெண்ணிலா

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னை வீட்டிற்குள் எதிர்மனுதாரர்கள் அனுமதிக்காதது சம்மந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் அளித்தேனா என்றால் புகார் அளித்தேன் . ஏற்கனவே நீதிமன்றம் எனக்காதரவாக அளித்துள்ள பாதுகாப்பு உத்தரவின் அடிப்படையில் என்னையும் என் இரு குழந்தைகளையும் காவல்துறையினர் எதிர்மனுதாரரின் வீட்டில் விட்டு விட்டு சென்றனர். ஆனால் மீண்டும் அவர்கள் என்னையும் என் குழந்தையையும் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். மேற்கூறிய சங்கதிகள் குறித்து காவல்துறையில் அளித்த புகார் மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எழுத்து பூர்வமான புகார் எதுவும் அளிக்கவில்லை . நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தான் காவல்துறையினரை நான் அணுகினேன் . என்னை கொண்டு வந்து விட்டு சென்ற காவல்துறையினரின் பெயர் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் அவர்களின் பெயர் தெரியாது. நான் அனைவரின் காலிலும் விழுந்தால் தான் எதிர்மனுதாரர்கள் வீட்டிற்குள் எங்களை சேர்த்து கொள்வதாக என் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அது சம்மந்தமாக நான் காவல்துறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை . எதிர்மனுதாரர்கள் என் கழுத்தை பிடித்து நெறித்து என்னை வீட்டிற்குள் விடாமல் இருந்ததற்கும் காவல்துறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை . ஏனென்றால் வீட்டிற்குள் நடந்ததாலும், போலீசுக்கு போன் செய்தும் அவர்கள் வரவில்லை . நான் செல்வதற்கு முன்பாகவே 1ம் எதிர்மனுதாரரின் அக்கா காவல்நிலையத்திற்கு சென்று விட்டார். நான் செய்த தவறை 1ம் எதிர்மனுதாரர் தட்டிக் கேட்டதால் தான் நான் என் தகப்பனாரின் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல . அவர்களாகவே தான் என்னை வீட்டிடைவிட்டுவெளியேற்றினார்கள். 1ம் எதிர்மனுதாரர் என்னை என்னென்ன வார்த்தைகளால் ஆபாசமாக திட்டினார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான் .

என் செல்போன் எண் என்ன என்றால் 99528 88297. நான் எத்தனை வருடங்களாக செல்போன் பயன்படுத்தி வருகிறேன் என்றால் 10 வருடங்களாக பயன்படுத்துகிறேன். நான் வீட்டில் சமைக்காமல் 1 ம் எதிர்மனுதாரரையும், என் இரு குழந்தைகளையும் பட்டினி போட்டு வந்தேன் என்றால் சரியல்ல . இன்று வரையிலும் நான் தையல் தொழில் செய்து என் குழந்தைகளை பார்த்து கொண்டு தான் வருகிறேன் . நான் சரியாக சமைக்காமல் 1 ம் எதிர்மனுதாரரை ஹோட்டலில் வாங்கி வரும்படி கூறுவேன் என்றால் சரியல்ல . பொய். என் நடவடிக்கையினை திருத்தி கொள்ள சொல்லி 1 ம் எதிர்மனுதாரர் சொல்லியும் நான் அதை திருத்தி கொள்ளவில்லை என்றால் சரியல்ல . நான் 1 ம் எதிர்மனுதாரரை அவரின் வீட்டில் இருக்கும் போது வீட்டிற்குள் வராதேடா, பிச்சைக்கார நாயே என்று பலமுறை 1 ம் எதிர்மனுதாரரை நான் திட்டி அவமானப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல . நான் தான் 1 ம் எதிர்மனுதாரரிடம் அடிக்கடி அவருடன் வாழப்பிடிக்கவில்லை என்று கூறி நான் தனியாக சென்று விடுவதாக மிரட்டினேன் என்றால் சரியல்ல . 1 ம்எதிர்மனுதாரர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் முதலில் ஸ்டுடியோ வைத்திருந்தார் . அதன் பின் வேலைக்கே செல்லவில்லை . 1 ம் எதிர்மனுதாரர் திருமண விசேசங்களுக்கு வீடியோ எடுப்பதற்காக வெளியூருக்கு செல்வார் என்றால் செல்வார் . ஆனால் உண்மையிலேயே செல்வாரா என்று எனக்கு தெரியாது . 1 ம் எதிர்மனுதாரர் எங்கு என்ன் வேலைக்கு செல்கிறார்என்று நான் கேட்டு தெரிந்து கொள்வேனா என்றால் கேட்டாலும் சொல்லமாட்டார். 1 ம் எதிர்மனுதாரர் வெளியூருக்கு திருமண விசேசங்களுக்கு செல்வது வழக்கம் என்றாலும் , நான் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவர் வெளியூர் செல்லும் போது என் செல்போன் மணிக்கணக்காக என்கேஜ்ட்டாக இருக்கும் என்றால் சரியல்ல. அவர் எனக்கு போனே செய்ய மாட்டார். 1 ம் எதிர்மனுதாரர் வெளியூருக்கு சென்றிருந்த போது நான் வேறு யாருடனோ பல மணி நேரமாக பேசிக்கொண்டிருந்தது அவருக்கு தெரிய வந்தது என்றால் பொய் . அது பற்றி அவர் கேட்டதால் தான் நான் அவர் மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் 15 பவுன் நகைகளை பிடுங்கி வைத்து கொணடு என்னையும் என் இரு குழந்தைகளையும் வெளியேற்றி விட்டார் . அதனால் தான் இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளேன். எனக்கு எத்தனை மகன்கள் என்றால் 2 மகன்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் என் மாமனார் என் மூத்த மகனை வைத்திருக்கிறார் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது என் இரண்டாம் மகன் என்றால் ஆமாம் . ஒரு நாள் 1 ம் எதிர்மனுதாரர் கடையில் இருந்து வீட்டிற்கு வந்த போது நானும் என் அக்கா கணவரும் வீட்டில் இருந்தோம் என்றால் சரியல்ல. அது பொய். அதைப்பற்றி 1 ம் எதிர்மனுதாரர் கேட்டபோது தான் நான் அவரின் ஸ்டுடியோவுக்கு சென்று அவரின் கேமரா மற்றும் மற்ற உபகரணங்களைத் தூக்கி போட்டு உடைத்து விட்டேன் என்றால் சரியல்ல . 1 ம் எதிர்மனுதாரர் இரு திருமணம் மற்றும் ஒரு நிச்சயதார்த்த விழாவினை வீடியோ பதிவு செய்த மெமரி கார்டை அவரின் கடைக்கு முன்பிருக்கும் சாக்கடையில் எறிந்து விட்டேன் என்றால் பொய் . அவரே தான் தீ வைத்து எரித்து விட்டார். இவ்வழக்கிற்கு முன்பாகவே 1 ம் எதிர்மனுதாரர் மீது **STC** 3051/2007 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம் . அவ்வழக்கில் 1 ம் எதிர்மனுதாரரே ஸ்டுடியோவுக்கு நெருப்பு வைத்து விட்ட விபரத்தை கூறியுள்ளேனா என்றால் அந்த சமயத்தில் அவ்வாறான சம்பவம் எதுவும் நடக்கவில்லை . 2015 ல் நடந்தது. இவ்வழக்கு 2016 ல் தாக்கல் செய்த சமயத்தில் கூட ஸ்டுடியோவுக்கு நெருப்பு வைத்த விபரத்தை சொல்லி புகார் அளித்தேனா என்றால் 1 ம் எதிர்மனுதாரர் தான் செய்திருக்க வேண்டும் . அவ்வாறான மேற்கூறிய சம்பவமே நடக்கவில்லை என்றாலும் , நானே சாக்கடையில் போட்டு விட்டு 1 ம் எதிர்மனுதாரர் தீ வைத்து எரித்து விட்டதாக பொய்யாகக் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் செய்த தவறால் தான் 1 ம் எதிர்மனுதாரர் கடையை காலி செய்து விட்டார் என்றால் சரியல்ல . நான் மெமரி கர்ரடை எரித்ததால் வாடிக்கையாளர்கள் 1 ம் எதிர்மனுதாரரிடம் ரூ 2 லட்சம் கேட்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . என் மூத்த மகன் ஆர்கன் பழக வேண்டும் என்று கூறியதால் கல்யாணி என்ற நிறுவனத்தில் இருந்து அவனுக்கு 1 ம் எதிர்மனுதாரர் கீ போர்டு வாங்கி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கூறிய சம்பவம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . 1 ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள கோபத்தில் தான் என் மூத்த மகனை இசைக்கல்லூரிக்கு

அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மகன் படிக்க வேண்டும் என்று தான் நினைப்பேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.